1991 சனவரி 22]

குறிப்பிட்டு ஏதாவது ஒன்றிரண்டு சொல்வார்களேயானால், அதை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசுக்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் வளர்ப்புப் பண்ணை அமைத்தல்.

*9622—டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீன் வளர்ப்புத் துறை, தனியார் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு நிலத்தைத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆயிரம் கிலோமீட்டர் நீளத்திற்கு விரிந்து பரந்துள்ள தமிழகத்தின் கடற்கரையையொட்டி ஆயிரக் கணக்கான ஹெக்டேர் நிலத்தில் இரால் மீன் வளர்ப்பு நடைபெறு கிறது. அஃதன்னியில் உள் நிலப் பகுதிகளில் தண்ணீர் வசதி கிடைக்கக்கூடிய பகுதிகளில் மீன் வளர்ப்புப் பண்ணை, மீன் குஞ்சுப் பொறிப்புப் பண்ணை இவைகளை ஏற்படுத்தி, மீன் உற்பத்தியை மேம்படுத்த வருவாய்த் துறை, வனத் துறை, நீர் வரத்து அல்லாத ஓடை புறம்போக்கு நிலங்களை மீன் வளத் துறை மூலம் தனியாருக்குக் குத்தகை அடிப்படையில் ஒதுக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

10-25 மணி

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உள்நாட்டு மீன் வளர்ப்புப் பகுதி களில் மீன் பண்ணை அமைக்க அரசு நிலம் கொடுப்பதற்கான வாய்ப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

வெளிமாநிலங்களில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த கைத்தறி கூட்டுறவு விற்பனை நிலையங்கள்.